

கற்பனை கடந்த ஜோதி கருணையே உருவமாகி
அற்புத கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

—பெரியபுராணம்



## ஸ்ரீமத் நடராஜமூர்த்தியின் நடனத்தின் தத்துவம்

சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம். அனுக்கிரகம் ஆகிய பஞ்ச கிருத்தியங்களும் எம்பெருமானது ஆனந்த நடனமாகும். இவை பரம சிவத்தின் தாண்டவ ஸ்வரூபம். மாயா பாசத்தால் கட்டுண்டு மயங்கி யுழலும் மக்கள், தங்களுடைய மகத்தான சச்சிதானந்த நிலையையடைவதற்கு இம்மகா மகிமை தங்கிய ஆனந்தத் தாண்டவ தரிசனமே ஓர் அரிய பெரிய சாதனமாகும்.

509

# நினைவு மலர்

சோமாஸ்கந்தர்.

அமிர்தவல்லி அம்மையார்

சிராத்ததினம்

(6-6-1970)

அன்பளிப்பு— 'ஈழநாடு' யாழ்ப்பாணம்.



சாதாரண வருடம் சித்திரைத் திங்கள் 21-ம்
நாள் (7-5-1970) இறைவனடி சேர்ந்த
"கொக்குவில் ஆச்சி" என்ற
**சோமாஸ்கந்தர் அமிர்தவல்லி அம்மையார்**

ஓம்
சிவமயம்

தென்னாடுடைய சிவனேபோற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினி ளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க
வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயனே
விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாந்
தன்மையினாற்
கண்ணிற்பணிமின் கனிந்து.

## நால்வர் துதி

பூழியர் கோன் வெப்பொழித்த
புகலியர் கோன் கழல் போற்றி
ஆழி மிசைக்கன் மிதப்பில்
அணைந்த பிரானடி போற்றி
வாழி திருநாவலூரர் வன்தொண்டர்
பதம் போற்றி
ஊழிமலி திருவாவூரர் திருத்தாள் போற்றி.

## வைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒரு தலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதடு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## திருஞானசம்பந்த மூர்த்தி தேவாரம்

பண் குறிஞ்சி - 1-ம் திருமுறை

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றூர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்ற வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்று பாவமே.

இராகம் : நவரோஸ் பண் - பியந்தைக்காந்தாரம்
மிஸ்ரதிருபுடைய தாளம் அக்ஷரம் 7

வேயுறு தோழிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
னுளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

இராகம் : பைரவி பண் - கௌசிகம்
சதுஸ்ரதிருபுடை தாளம் அக்ஷரம் 8

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொருளாவது
நாத னாம நமச்சிவாயவே.

# சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

பண் - கொல்லிக் கௌவாணம் (7-ம் திருமுறை)

கண்டசாபு தாளம்

அருமணியை முத்தினை ஆனஞ்சும் ஆடும்
அமரர்கள் தம் பெருமானை அருமறையின்
பொருளைத்

திருமணியைத் தீங்கரும்பின் ஊறலிருந்
தேனைத் தெரிவரிய மாமணியைத் திகழ்தரு
செம் பொன்னைக்

குருமணிகள் கொழித்திழிந்து சுழித்திழியுந்
திரைவாய்க் கோல்வளையார் குடைத்
தாடுங் கொள்ளிடத்தின் கரைமேல்

கருமணிகள் போல் நீலம் மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும்
அடியேன்

திருநீலகண்டத்துக் குயவனார்க்கடியேன்

இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்

இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும்
அடியேன்

வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்
கடியேன்

விரிபொழில் சூழ் குன்றையார்
விறன்மிண்டர்க் கடியேன்

அல்லிமென் முல்லையந்தார் அமர்
நீதிக்கடியேன்

ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

நீள நினைந்தடியே னுமை நித்தலுங்
கை தொழுவேன்
வாளன கண்மடவா ளவள் வாடி
வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை யெம்பெருமானவை
யட்டித் தரப்பணியே.

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

### திருத்தாண்டகம்

6-ம் திருமுறை

தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங்
கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியாலிந்த
அனைத்துலகு மாளலாமென்று பேசு
மாங்காரந் தவிர்நெஞ்சே யமரர்க்காக
முனைத்து வரும் மதின் மூன்றும் பொன்ற
வன்று
முருகிய வெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்த பெருங் கருணையனைத் தான
மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

மிறைபடுமிவ் வுடல்வாழ்வை மெய்யென்
றெண்ணி
வினையிலே கிடந்தழுந்தி வியவே னெஞ்சே
குறைவுடையார் மனத்துளான் குமரன்றாதை
கூத்தாடுங் குணமுடையான் கொலை
வேற்கையான்
அறைகழலுந் திருவடிமேற் சிலம்பு மார்ப்ப
வவனிதலம் பெயரவரு நட்ட நின்ற
நிறைவுடையா னிடமாநெய்த் தானமென்று
நினையுமா நினைத்தக்கா லுய்யலாமே

பேசப் பொருளலாப் பிறவி தன்னைப்
பெரிதென்றுன் சிறு மனத்தால் வேண்டியீண்டு
வாசக் குழன் மடவார் போகமென்னும்
வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே
தூசக் கரியுரித்தான் றூநீ றாடித்
துதைந்திலங்கு நூன்மார்பன் றொடர கில்லா
நீசர்க் கரியவனெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

(8-ம் திருமுறை)

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச்
சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுள்ளோர் பிரானே
ஒருத்தனே யுன்னை யோலமிட்டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்
துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியே ஞதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி யெளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்த நற்சோதீ
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## இராமலிங்க சுவாமி பாடல்


கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்
வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த
கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்
தண்ணீரே உகந்த
தண்ணீர் இடைமலர்ந்த சுகந்த மணமலரே
மேடையிலே
வீசுகின்ற மெல்லியிழங் காற்றே
மென்காற்றில்
விளைசுகமே சுகத்தில் ஊறும் பயனே
ஆடையிலே
எனை மணந்த மணவாள பொதுவில்
ஆடுகின்ற
அரசே என் அலங்கல் அணிந்தருளே.

வான்கலந்த மாணிக்க வாசகநின்
வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்
சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்
சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல்
இனிப்பதுவே.

# பட்டினத்துப்பிள்ளையார் பாடல்

பிறவாதிருக்க வரம் பெறல் வேண்டும்
பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காணிது
வெப்படியோ
அறிவார் புகழ் தில்லையம்பலவாணை
ரடிக்கமலம்
மறவா திருமனமேயது காணன்
மருந்துனக்கே.

நல்லா ரிணக்கமு நின்பூசை நேசமு
ஞானமுமே
அல்லாது வேறு நிலையுள தோவக
மும்பொருளும்
இல்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு
மெழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே யிறை
வாகச்சியேகம்பனே.



# நடராஜப் பத்து

வழிகண்டு உன்னடியைத் துதியாத
போதிலும்
வாஞ்சையில்லாத போதிலும்
வாலாய மாய்க் கோயில் சுற்றாத
போதிலும்
வஞ்சமே செய்த போதிலும்
மொழியெதுகை மோனையில் லாமலே
பாடினும்
மூர்க்கனேன் முகடாகினும்
மோசமே செய்யினும் தேசமே கவரினும்
முழுக்காமி யேயாகினும்
பழியெனக் கல்லவோ தாய்தந்தைக்
கல்லவோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைவிக்குப் பாதியுடல் ஈந்த நீ
பாலனைக் காக்கொணாதோ
எழில் பெரிய அண்டங்கள் அடுக்காய்
அமைத்த நீ
என் குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லை வாழ் நடராஜனே.

## தாயுமானசுவாமிகள் பாடல்

அங்கையொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப
வன்பினாலுருகி விழிநீர்
ஆறாக வாராத முத்தியின தாவேச
வாசைக் கடற்குண் மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே யெனவுமொழி
தழுதழுத்திட வணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந்
தண்ணருள் கொடுத்தாள்வையோ
துங்கமிகு பக்குவச் சனகன் முதல் முனிவோர்
தொழுதருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்தியே
சொரூபானு பூதி காட்டிச்
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயானந்த குருவே.

தந்தை தாய் தமர் தார மகவென்னு
மிவையெலாஞ்

சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேகமில்லை மணி மாட மாளிகை மேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்திர ஜாலக்
கோலம்

வஞ்சனை பொறாமை லோபம்
வைத்த மனமாங்கிருமி சேர்ந்த மல
பாண்டமோ

வஞ்சனை யிலாத கனவே
யெந்த நாளுஞ்சரி யெனத்தேர்ந்து
தேர்ந்துமே

யிரவு பகலில்லா விடத்
தேசமாய் நின்ற நின்னருள் வெள்ள மீதிலே
யானென்பதறவு மூழ்கிச்
சிந்தை தான் றெளியாது சுழலும் வகை
யென்கொலோ

தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடி கொண்ட வறிவான
தெய்வமே

தேசோம யானந்தமே.



## திருப்புகழ்

தொந்திசரிய மயிரே வெளிற நிரை
தந்த மசைய முதுகேவளைய இதழ்
தொங்க வொருு கைதடி மேல் வர மகளிர்
நகையாடி.
தொண்டு கிளவனி வனரெனை இருமல்
கிண் கிணென முரையே குழற விழி துஞ்சு
குருடு படவே செவிடு படு செவியாகி
வந்த பிணியு மதிலே யிடையு மொரு
பண்டிதனு மேயுறுவே தனையுமிள
மைந்தருடைமை கடனே தனமுடுக
துயர் மேவி
மங்கை யழுது விளவே யமபடர்கள்
நின்று சருவ மலமே யொழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின் மிசை
வரவேணும்.

## புராணம்

துய்யதோர் மறைகளாலுந்
துதித்திடற் கரியசெவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க
சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட
வேற்படை வாழ்க வன்னுள்
பொய்யில் சீரடியார் வாழ்க
வாழ்கவிப் புவன மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

# கொக்குவில் ஆச்சியார்

நெற்றியிலே திருநீறு. அருளொளி வீசும் நிறைந்த முகம். சிவத்தொண்டினுல் தேய்ந்து ஒடிந்த சடலம். தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் சிவப்பணிக்கே அர்ப்பணித்து தமது 83-வது வயதிலே பல்லோரும் ஏத்தப் பணிந்து காரைக்கால் அம்மையார் போல் சிவனடிக் கீழ் சேர்ந்தார், கொக்குவில் ஆச்சி எனும் அமிர்தவல்லி அம்மையார்.

புகழ் பெற்ற தமிழ்ப் பண்டிதர் சோமஸ் கந்தரை மணந்து இளம் வயதிலேயே அவரை இழந்தபின், அவர் வாழ்க்கை எல் லாம் தவ வாழ்க்கையாகமாறியது பிரார்த் தனை, ஜபம், கோவில் திருப்பணி, ஈசுவர தரிசனம், இவற்றுக்கே தம்மை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டார்கள். நமது சைவம் பல கடும் சோதனைகளையும் வென்று இன்னும் தலை நிமிர்ந்து இருக்கின்றதெனின் அதற்குக் காரணம் இத்தகைய மங்கையர்க் கரசிகளின் அரும் பெரும் தொண்டாகும்.

கொக்குவில் மாத்தனை முருகமூர்த்தி கோவிலில் ஸ்ரீ நடராஜப் பெருமானை பிர திஷ்டை செய்து, மண்டபம் கட்டி, கும்பாபி ஷேகமும் நடத்தி தினசரி பூசை நடக்க உடல்

நலமற்ற ஒரு மூதாட்டியார் செய்ய முடிந்ததெனின் அது அவரது தவசக்தியின் பயனும் இறைவனின் அருளுமே என்பதில் சற்றும் ஐயமில்லை. அக்கோயிலை மேன் மேலும் கட்டி பூரண திருப்பணிகள் செய்து, பூசை, திருவிழாக்களை சிறப்பாக நடத்தி, அந்த ஊர் மக்கள் மட்டுமன்றி, பலரும் திருவருள் பெற்று உய்ய வேண்டுமென்பதில் அவ்வம்மையாருக்குத்தான் எவ்வளவு ஆர்வம்! கண்ணீர் விட்டுக் கசிந்துருகி சிவப்பணி செய்த கொக்குவில் ஆச்சியார் ஈழத்துச் சைவப்பெண் குலதிலகங்களில் ஒருவராவார். அவரது ஆத்மா, சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடேசப் பெருமான் பொன்னார் திருவடியில் என்றும் இன்பம் திளைத்து நின்று நம்மையெல்லாம் நல்வழிப் படுத்தி, உய்விக்க உதவுமாக.!

ஈழநாடு லிமிட்டெட்,
சிவன் கோவில் மேலை வீதி,
யாழ்ப்பாணம்.